# குடும்பம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து



# ஒரு தாயானவள் மிகச்சிறந்த ஒருவளாவாள்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: தாயின் தினம், 10-05-1959

ஒரு குழந்தையுடன் முதன் முதலாக இருப்பதும் - அதை சரியான பாதையில் வைப்பதும் ஒரு தாயே.

ஒரு தாயானவள் மிகச்சிறந்த ஒருவளா வாள்.

இந்த வாழ்க்கையில் உன்னை முதலா வதாக பெற்றுக்கொள்வது யார் தெரியுமா, உன்னுடைய தாய் தான். உன்னை யாரா லும் தொடக்கூட முடியாது. ஏனென்றால் நீ கர்ப்பத்தில் உருவாகும் போது அவள் உன்னை தன் இருதயத்தின் கீழாக சுமந்து கொண்டிருக்கிறாள்.

இந்த வாழ்க்கையில் உன்னை முதலா வதாக அறிந்துக்கொள்வதும் அவளே,

உன்னை சுமப்பதும் அவளே, பிறகு நீ பிறக்கையில் முதலில் உன்னைத் தொட்டு நீ அழுகையில் உன் கண்ணீரைத் துடைக்கும் கைகளில் அவளுடையது ஒன்றாகும்.

இந்த வாழ்க்கையில் உன்னை முதன் முதலாக தட்டிக்கொடுத்து, உன்னிடத்தில் அன்பு கூர்ந்து, உன்னிடம் இனிய ஒலி எழுப்பி செல்லமாக கொஞ்சுவது உன்னுடைய தாயே ஆகும்.

இப்பொழுது ஒரு தாய்க்கு போதுமான கனம் அளிக்கப்படுவதில்லை என்று தான் நான் நினைக்கின்றேன்.

ஒரு குழந்தையுடன் முதன் முதலாக இருப்பது தாய் தான்.

ஆகவே அந்த குழந்தை எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும் என்பதற்கான

பெரிய பொறுப்பை அவள் உடையவளாக இருக்கிறாள்.

அக்குழந்தை எந்த பாதையில் செல்ல வேண்டும் என்பது அந்த தாய் எப்படி அந்த பாதையை துவக்கிக்கொடுக்கிறாள் என்பதை பொறுத்துத் தான் அமையும்.

அந்த குழந்தையை சரியான பாதையில் வைக்கும் பொறுப்பு அந்த தாயைச் சார்ந் தது. தேவனிடத்திலிருந்து அந்த பொறுப்பு வருகின்றது.

அதன் காரணமாகத் தான் தாய்மார்கள் அந்த விசேஷ தொடுதலைக் கொண்டிருக் கின்றார்கள் என்று நான் நினைக்கின்றேன்.





# பெண்களுக்கு வீட்டில் தங்க விருப்பமில்லை.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: ... பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு 23-06-1963

கிறிஸ்துவினுடைய வருகையின் அடையாளம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அவைகளை நோக்கிப் பாருங்கள்.

நான் இன்றிரவு உங்களிடம் கூறினது பலரால் விரும்பப்படாமலிருக்கலாம். ஆனால் அது உண்மையாகும். அது தேவன் கூறினதாவது, இதோ நாம் அவைகளைக் காண்கிறோம்.

பெண்களுக்கு வீட்டில் தங்க விருப்பமில்லை.


அவர்களுக்கு குடும்பத்தை கவனித்துக் கொள்ள பிரியமில்லை.

அவர்கள் குழந்தைகளை கவனித்துக் கொள்ள ஒரு நபரை பணிக்கு அமர்த்தி

விட்டு எங்காவது ஓரிடத்தில் களியாட்ட விருந்துக்கு சென்று விடுகின்றனர்.

சிறுவர்கள் குற்றம் புரிதல் மற்றும் எல்லா காரியங்களும் நடந்து கொண்டிருக் கின்றன; தலை மயிர் கத்தரித்தல், குட்டைக் கால் சட்டை அணிதல், அழகுபடுத்தும் சாதனங்களை உபயோகித்தல், பெண் களின் அழகு நாளடைவில் அதிகரித்துக் கொண்டே போகின்றது.

இயேசு கூறினது போன்று, மனிதன், தேவகுமாரர் விழத்தக்கதாக பிசாசானவன் வைத்திருக்கின்ற கண்ணியில் விழுந்துக் கொண்டிருக்கின்றனர். அது அவ்வாறே நிகழ வேண்டும். அவ்வாறு இருக்கும் என்று அவர் கூறினார். இதோ அது நிகழ்ந்துக்கொண்டிருக்கின்றது. அவர், "இவைகள் சம்பவிக்கும் போது, இந்த சந்ததி (ஒரு சந்ததிக்கு நாற்பது ஆண்டுகள்) ஒழிந்து போகாது' என்றார். அதை யோசித்துப் பாருங்கள்!





# ஐந்தாவது சுவிசேஷம்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: அமெரிக்காவின் மீது படையெடுப்பு, 09-05-1954

இக்காலையில் தாய்களாகிய நீங்கள், உண்மையான தாய்களாக இருந்து வருகின்ற நீங்கள், உங்களில் அநேகர் இருக்கிறீர்கள் என்று நானறிவேன். உங்களில் ஒவ்வொருவரும் என்றே நான் நினைக்கிறேன். நான் உங்களுக்கு ஒன்றைக் கூறட்டும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

நான் நினைப்பதென்னவென்றால் நீங்கள் தான் ஐந்தாவது சுவிசேஷம். உங்கள் பிள்ளைகளுக்கு என்ன இருக்கின் றது என்று நான் உங்களுக்கு கூறட்டும். ஒரு சிறு காரியம் மாத்திரமே. ஏனென்றால் சகோதரன் நெவில் ஒருக்கால் இதன் பேரில் பிரசங்கிக்கக்கூடும்.,. இன்றிரவு ஒரு தாயைக் குறித்து அல்லது நம்மில்

யாராவதொருவர் செய்யலாம். அது சரியே, தாய்களைக் குறித்து, ஆனால் கவனியுங்கள், உங்களை ஒன்று நான் கேட்கட்டும்.

நினைவில் கொள்ளுங்கள். மோசே ஒரு சிறு பையனாக இருக்கையில் அவனுக்கு வேண்டிய போதனையை அளித்தது தாயாகும்.

சிறு மோசேயை தன்னுடைய முழங் கால்களில் வைத்துக் கொண்டு மோசே" என்று கூறி எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்தது ஒரு தேவ பக்தியுள்ள தாயாகும்.

அவன் தான் அவளுடைய ஆசான் ஆவான். இல்லை ... அவள் தான் அவனுடைய ஆசான் ஆவாள். அவள் பார்வோனுக்கு கீழாக இருந்து அவனுக்கு இந்த காரியங்களையெல்லாம் கூறினாள்.

அவள், "மோசே, ஒரு நாளிலே நீ இஸ்ரவேல் புத்திரரை விடுவிக்கப்

போகின்றாய். அதை செய்வதற்காக அழைக்கப்பட்ட பையன் நீயே. உலகத்தின் காரியத்தினாலே உன்னை கறைப்படுத்திக் கொள்ளாதே. உன்னை பரிசுத்தமாக வைத்துக்கொள். ஏனென்றால் நீ தான் அந்தக்காரியத்தை செய்வதற்காக அழைக் கப்பட்ட ஒருவன்" என்று கூறினாள்.

அவன் எந்த ஒரு வேதகலாசாலைக்கும் செல்லவில்லை. எந்த ஒரு போதனை செய் கின்ற இடத்திற்கும் அவன் செல்லவில்லை என்பதை நாம் அறிவோம்.

அஞ்ஞானியின் இடமாகிய பார்வோ னின் அரண்மனைக்குள்ளாகவே அவன் தங்கியிருந்தான்; ஆனால் அவனுடைய தாய் அவனுக்கு போதனை செய்தாள். (சகோதரன் பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று முறை தட்டுகிறார் - ஆசி.)

அது தான் ஒரு உண்மையான தாய். அவள் கர்த்தருடைய பிரமாணங்களை அவனுக்குக் கற்றுக்கொடுத்தாள். அவன்

எவ்விதமாக பரிசுத்தமாக இருக்கவேண்டு மென்று. அவனுக்கு அவள் எடுத்துக் கூறினாள்.

அவன் எப்படி, எந்த விதத்தில் எவ்விதமாக ஜீவிக்க வேண்டுமென்றும், தேவன் என்ன செய்யப் போகிறார் என்றும் அவனுக்கு என்ன செய்யப்போகின்றார் என்றும் கூறினாள்.

அது அவனுடைய ஜீவிய காலம் வரை அவனிலே தங்கிவிட்டது.

ஆகவே எந்த ஒரு அருமையான, உண்மையான, உத்தமமான தாயும் தன்னு டைய சிறு குழந்தைகளை படக்காட்சி களுக்கும், நடன ஆட்டங்களுக்கும் அதைப் போன்றவற்றுக்கும் அனுப்பாமல், அவளே தன்னுடைய சிறுபிள்ளையை எடுத்துத் தன் மடி மீது வைத்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கற்றுக் கொடுப்பாள்.




ஒரு குழந்தைக்கு முதலாவதாக ஒரு பிரசங்கி இருப்பாரென்றால் அது அதன் தாயே, நான்கு, ஐந்து சுவிசேஷங்கள் உள்ளன; மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் மற்றும் ஒரு தாய்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: எதிர்பார்ப்பு, 01-10-55

ஒரு குழந்தைக்கு முதலாவதாக ஒரு பிரசங்கி இருப்பாரென்றால் அது அதன் தாயே, நான்கு, ஐந்து சுவிசேஷங்கள் உள்ளன; மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் மற்றும் ஒரு தாய்.

ஒரு தாயானவள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு, தன் பிள்ளைகளுக்கு போதனை செய்து, எப்படி ஜெபம் செய்ய வேண்டுமென்றும் எவ்விதமாக தேவனை அறிந்துக்கொள்ள வேண்டுமென்றும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஆனால் அவ்விதமாக செய்வதற்கு பதிலாக அக்குழந்தையை, ஒரு குழந்தை யைப் பேணும் வேலையாளிடம் கொடுத்து விட்டு இரவு முழுவதுமாக சுற்றித் திரிகி றார்கள்.

அதன் பிறகு ஞாயிற்றுக்கிழமை காலையில் ஞாயிறு பள்ளிக்கு சென்று தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளுகிறார்கள்.

நான் சற்று பிரசங்க பொருளிற்கு வருவது நல்லது, சற்று விலகிச் சென்று விட்டேனல்லவா? நான் இந்த காரியங் களைக் குறித்து சத்தியத்தை விசுவாசிக்கும் சாஸ்சாபராஸ் (Sassafras) போல ஒருவ னாவேன் (சாஸ்சாபராஸ் (Sassafras) என்பது ஒரு அமெரிக்க மர வகையாகும். அதன் பட்டை மருந்தாக பயன்படுத்தப் படும் - தமிழாக்கியோன்) அது சரியே. சிறிது காலம் கழித்து நீங்கள் எரிக்கப்பட நான் விட்டு விடுவதைக் காட்டிலும் இப்பொழுதே உங்களுடைய மேற்பரப்பை நெருப்பினால் சுடுவேனாக - அது உண்மையாகும். ஆகவே இது தான் உண்மையென்றும், இது சுவிசேஷ

சத்தியமென்றும் சற்று நினைவில் கொள்ளுங்கள்.



# பெண்மை நிலை உடைக்கப்படுமானால் அது எந்த ஒரு தேசத்தின் முதுகெலும்பு உடைக்கப்படும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: எபிரெயர் அதிகாரம் 7, பாகம் 1, 15-9-1957

ஒரு பெண்ணானவள் ஒரு சிறந்த, புனிதமான, அருமையான, அற்புதமான ஸ்தானத்தைக் கொண்டவளாக இருக்கின்றாள்.

ஆனால் அவள் தன்னை அவ்விதமாக சரியாக நடத்திக்கொள்ள வேண்டியவளாக இருக்கின்றாள்.

ஒரு தாயாக, ஒரு பெண்ணாக, ஒரு பெண்மை நிலையையுடையவளாக அவள் தன்னுடைய ஸ்தானத்தைக் காத்துக் கொள்ள வேண்டும்.

பெண்மை நிலை உடைக்கப்படுமானால் அது எந்த ஒரு தேசத்தின் முதுகெலும்பு உடைக்கப்படும்.

நம்முடைய பெண்களின் நல்லொழுக்கச் சீர்கேட்டினால் தான், அதன் காரணமாகத் தான் இன்றைக்கு நம்முடைய நாடு பாழாய்ப் போயுள்ளது.

அது முற்றிலும் சரியே, நிச்சயமாக, நம்மிடையே இருக்கின்ற அந்த அழுகிப் போன நிலை தான் அதை உடைத்துக் கொண்டிருக்கின்றது





# அது தான் முதுகெலும் பாகும்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: உலகம் மறுபடியும் விழுந்து போதல் - 27.11.1963

தாய்மை என்பது நம்முடைய தேசத்தை ஒன்றாக பிணைத்துக் கொண்டிருக்கும் காரியங்களில் ஒன்றாகும். அது தான் முதுகெலும்பாகும்.

ஆகவே தாய்மை என்பது ஒரு பெண் தாயாக ஆக தேவன் அளிக்கும் ஒரு அருமையான நன்மையாகும்.

ஆனால் அக்காரியமானது எப்பொழுதோ சென்று விட்டது.

நீண்ட காலத்திற்கு முன்னதாகவே இவ்வுலகத்தின் பெண்கள், அவர்களு டைய நன்நடத்தையானது ஹாலிவுட் நாகரீக தேவதைக்கு தலைவணங்கி விட்டது.

ஹாலிவுட்டைப் போலவே தங்களை அமைத்துக் கொண்டு, அதைப்போன்றே உடையுடுத்திக்கொண்டு, ஹாலிவுட் நடிகர்கள் சிலர் நடந்து கொள்வது போலவே இவர்களும் நடந்து கொள்கின்றனர்.

அநேக சமயங்களில் தேவபயமற்ற, பாவத்திற்குரிய விதத்தில் உடையுடுத்திக் கொள்ளுதல், மற்றவர்களை பாலுணர்வு விதத்தில் கவரும்படிக்கு நடந்து கொள்ளுதல் போன்றவைக்கு இன்றைக்கு சபைகளில் நாகரீக செயலாக கருதப்படுகின்றது.

மேலும் பிரசங்க பீடத்தின் பின்பாக இருக்கின்ற மேய்ப்பர்கள் அதை கடிந்து கொள்வதற்கு போதுமான துணிவில்லாதவர்களாயும், பரிசுத்த ஆவியின் பெலன் இல்லாதவர்களாயும் இருக்கின்றனர்.

லோத்து அங்கே உட்கார்ந்து கொண்டு தன்னுடைய ஆத்துமாவில் கவலை கொண்டு ஒன்றும் செய்யாமல் இருப்பது போல, அவர்கள் செய்வது தவறானது

என்று மேய்ப்பர்கள் மக்களிடம் எடுத்துச் சொன்னால் உணவுச் சீட்டு கிடைக்காது. ஆம்.




பழமை
நாகரீகமுடைய
தாயானவள்
தன்னுடைய
குடும்பத்தை
பேணிக்காக்கின்ற
ஒருவளாய்
இருப்பாள்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: மோசேயைக் குறித்த போதனை – 13.05.1956

இப்பொழுது நமக்குத் தெரிந்தவரை பூமியில் ஒரு உண்மையான தாயை விட இனிமையானதொரு காரியம் எதுவுமே இல்லை.

தேவன் தாமே அந்த உண்மையான கருணையுள்ளம் வாய்ந்த தாயின் ஆத்து மாவை ஆசீர்வதிப்பாராக.

ஆனால் தாய்" என்று அழைக்கப் படுகின்ற அநேக பதிலாள்கள் (substitutes), மாற்றாள்கள் அநேகர் நம்மிடையே உள்ளனர். அது ஒரு தாயல்ல. அவர்கள் பிள்ளைகளைக் கொண்டுள்ள ஸ்திரீகளே ஆவர். ஆனால் ஒரு தாய் அல்ல.

பழமை நாகரீகமுடைய தாயானவள் தன்னுடைய குடும்பத்தை பேணிக்காக் கின்ற ஒருவளாய் இருப்பாள்.

அவள் இந்த ஒய்யார நடனமாடும் இடங்களிலும், களியாட்டுகளிலும் முழு இரவும் புகைபிடித்துக் கொண்டும், குடித்துக் கொண்டும் இருக்கமாட்டாள்.

அப்படி செய்பவள் புனிதமான பெயராகிய தாய் என்ற பெயரை பெற அவளுக்கு தகுதியே இல்லை. ஒரு பிள்ளையை வளர்க்கின்ற ஒரு ஸ்திரீயாக மாத்திரமே அவள் இருப்பாள். அவ்வளவு தான்; ஆனால் ஒரு தாய் அல்ல, ஏனெனில் ஒரு தாய் என்பது வேறொரு அர்த்தத்தைக் கொண்டதாய் இருக்கின்றது. இப்பொழுது நான் நினைக்கிறேன். நீங்கள்..



பிறகு அவர்களெல்லாரும் அந்த பழைய குடும்ப வேதாகமத்தை எடுத்து அதிலிருந்து சிறிது வாசித்து மேஜையைச் சுற்றிலும் எல்லோரும் கூடி ஜெபம் செய்வது வழக்கமாயிருந்தது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 58-1001 - சரித்திரத்திலிருந்து அவரை வெளியேயெடுத்துயர்த்துதல்

மேலும் நம்மிடையே குடும்ப வாழ்க்கை நெருக்கடியும் இருக்கின்றது. குடும்ப வாழ்க்கையானது ஆழமில்லாத உறுதியற்ற நிலைக்குள்ளாக சென்று கொண்டிருக் கின்றது போல காணப்படுகின்றது.

ஒரு குடும்பத்தில் குடும்பத்தின் தலை வனான தகப்பன் காலையில் உட்கார்ந்து தன்னுடைய குடும்பத்தாரிடம் பேசுவார்.

பிறகு அவர்களெல்லாரும் அந்த பழைய குடும்ப வேதாகமத்தை எடுத்து அதிலிருந்து சிறிது வாசித்து மேஜையைச் சுற்றிலும் எல்லோரும் கூடி ஜெபம் செய்வது வழக்கமாயிருந்தது.

அப்படிப்பட்ட காரியமானது இப்பொழு தெல்லாம் காணப்படுவதேயில்லை.

அந்த நாள் முடிந்த பிறகு தாயானவள் பாத்திரங்களையெல்லாம் கழுவி முடித்த பிறகு மறுபடியுமாக அவர்களெல்லோரும் ஒன்று கூடி வேதாகமத்திலிருந்து இன்னும் சிறிது வாசித்து படுக்கைக்கு செல்லும் முன்னர் ஜெபிப்பார்கள்.

அந்நாட்களில் சிறுவர் குற்றம் புரிதல் என்பது மிகவும் அரிதான ஒரு சம்பவமாக இருந்தது.

பையன்களெல்லாம் வேலைக்கு வயல் வெளிக்குச் சென்றனர், பெண்பிள்ளைகள் நீரோடைகளில் துணி துவைக்க அம்மா விற்கு உதவி செய்தனர்.

ஆனால் இன்றைக்கோ நாம் ஒரு சிறு பொத்தானை அழுத்தும் போது இயந்திரம் எல்லா பாத்திரங்களையும் கழுவி முடித்து விடுகின்றது.

அம்மா காரில் அமர்ந்து சீட்டு கச்சேரி விருந்திற்கு அல்லது எங்கோ வெளியில் சென்று விடுகிறார்கள்.

தெருக்களில் எலியைப் போல இங்குமங்கும் ஓடுகின்றாள்.

வயல் பணியை ஒரு ட்ராக்டர் இயந்திரம் (tractor) செய்து முடித்து விடுகின்றது.

ஆகவே நம்மிடையே இருப்பவர்கள் எல்லாம் யாரென்றால் செய்வதற்கு ஒன்று மில்லாத சோம்பேறி மக்கள் கூட்டமே.

அமெரிக்காவில் அநேக வீடுகளில் குடும்ப வாழ்க்கையானது மிகவும் அசட்டை செய்யப்பட்டிருக்கின்றது.

வேதாகமம் எங்கோ உள்ளே வைக்கப் பட்டு அதைத் தேடி எடுக்க வேண்டு மென்றால் அவர்களுக்கு ஒரு மணி நேரம் தேவைப்படும் அளவிற்கு இன்று அநேக வீடுகளில் நிலைமையானது உள்ளது.

# அவர்கள் அந்த பிள்ளையைக் குறித்து அக்கறை கொள்வதேயில்லை



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: செல்வாக்கு, 14.11.1963

நான் உங்களுக்கு இதைக் கூறட்டும்.

நான் நினைப்பதென்னவென்றால், இன்றைக்கு தேசமுழுவதிலும் சிறுவர் குற்றம் புரிதல் காரியமானது அலை போல பாய்ந்துக்கொண்டிருக்கின்றது.

ஆனால், உண்மையாக பார்ப்போ மானால், அக்காரியமானது வீட்டில் தான் ஆரம்பித்தது என்று நான் நினைக்கின்றேன்.

பெற்றோர் அவ்விதமாக விட்டு விட்டனர் என்று நான் நினைக்கின்றேன்.

பிள்ளையானது ஒரு அருமையான, பழமை நாகரீகம் கொண்ட, தேவ பக்தி யுள்ள குடும்பத்தில் வளர்க்கப்பட்டிருக்கு மானால்; அதினால் எல்லாம் முடிந்து விடும் என்று நான் கூறவில்லை, நிச்சய மாக இல்லை, ஆனால் அவ்விதமான ஒரு

வளர்ப்பு பிள்ளைக்கு சரியான ஒரு விளைபயனை, பாதிப்பை நிச்சயமாக அது உண்டாக்கியிருக்கும்.

அநேக சமயங்களில் நான் நினைப்பது என்னவென்றால் அநேக வீடுகளில் பிள்ளைகள் தவறான விதத்தில் வளர்க் கப்பட்டு தெருக்களில் திரிய விடப்பட்டு அப்பிள்ளையின் தாய் அல்லது அதன் தந்தை மதுபான பார்களில் இருக்கையில் அப்பிள்ளை தனக்கு வேண்டியதை தானே பார்த்துக் கொள்கின்றது.

அவர்கள் அந்த பிள்ளையைக் குறித்து அக்கரை கொள்வதேயில்லை.

மற்றொரு காரியம் என்னவென்றால் அவர்கள் அதை நேசிக்காமல் அதற்கு தேவைப்படுகின்ற பாசத்தை காண்பித்து அதை எடுப்பதேயில்லை.

அது சிறு பிள்ளையாகும். நீங்கள் அதற்கு அன்பு, மரியாதை மற்றும்

வேதத்தை வாசிப்பதற்கு கற்றுக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள்.




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தி யிலிருந்து
ஆகவே, ஓ, ஒரு குடும்பத்தை பொறுத்தமட்டில், நாம் அதை அருமையான ஒன்றாக இருக்கும்படிக்குச் செய்வோமானால் பிள்ளைகள் அதை விட்டு ஓடிப் போக விரும்பமாட்டார்கள்.

# செய்தி: செல்வாக்கு

நான் உங்களுடைய வீட்டுக்குள் வந்து உங்கள் வீட்டுச் சுவர்களில் எந்த விதமான படங்களை வைத்துள்ளீர்கள் என்பதை நான் பார்ப்பேனாக.

நான் உங்களுடைய வீட்டிற்குள்ளாகவோ அல்லது உங்களுடைய அலுவலகத்திற்குள்ளாகவோ வந்து எந்தவிதமான இசை போடப்பட்டுள்ளது என்று நான் பார்ப்பேனாக.

பாருங்கள்? என்ன காரியத்தை நீங்கள் படித்துக் கொண்டிருக்கிறீர்கள், எதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் கண்டு உங்களுக்குள்ளாக என்ன இருக்கிறது என்று நான் உங்களிடமாக கூறட்டும், ஏனென்றால் உங்களுக்குள்ளாக இருக்கின்ற அது தான் அதற்கு

வேண்டியதை மாத்திரமே நாடும். பாருங்கள்?

ஆகவே, ஓ, ஒரு குடும்பத்தை பொறுத்தமட்டில், நாம் அதை அருமை யான ஒன்றாக இருக்கும்படிக்குச் செய்வோமானால் பிள்ளைகள் அதை விட்டு ஓடிப் போக விரும்பமாட்டார்கள்.

அவர்களுக்கு வீடானது மகிழ்ச்சி வாய்ந்த ஒன்றாகவும், அருமையான ஒன்றாகவும், அவர்களை வரவேற்கிற ஒன்றாகவும், எங்கிருந்தாலும் அவர்கள் வீட்டை துரிதமாக அடைய துடிக்கும் நிலையில் வீடானது இருக்கும்படிக்கு அவர்களுக்காக இன்னும் அதிக காரியங்களைச் செய்யுங்கள்.

அந்த விதமாகத் தான் ஒரு குடும்பம் இருக்க வேண்டும்.



# ஏனென்றால் இயற்கையாகவே அவனுக்குள்ளாக உலகத்தின் ஆவி அவனுக்குள்ளாக பிறந்திருக்கின்றது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: பணமுமின்றி விலையுமின்றி, 02.04.1959

ஒரு பிள்ளை எப்படிப்பட்ட ஒரு அருமையான வீட்டில் வளர்க்கப்பட்டிருந் தாலும் சரி, சரியானதை செய்ய வேண்டும் என்று எவ்வளவாக அது போதிக்கப் பட்டிருந்தாலும் சரி, அது எனக்கு ஒரு பொருட்டே அல்ல; அந்த பிள்ளையானது மறுபடியும் பிறத்தலின் அனுபவத்தை அது ஏற்றுக்கொள்ளாதிருக்குமென்றால், அது ராக் - அண்ட்ரோல் இசையை கேட்கின்ற மாத்திரத்தில் அந்த இசையானது அப் பிள்ளையினுடைய கவனத்தை கவரும்.

ஏனென்றால் இயற்கையாகவே அவனுக் குள்ளாக உலகத்தின் ஆவி அவனுக்குள் ளாக பிறந்திருக்கின்றது.

ஆகவே அந்த சிறு பிள்ளையின் ஆவியை பிடித்துக் கொள்கின்ற அளவிற்கு இன்று பிசாசின் வல்லமையானது மிகப் பெரிதாக உள்ளது.



**இன்றைக்கு தாய்கள் தங்கள் பிள்ளைகளை எடுத்து அவர்களுக்கு வேதாகமக் கதைகளைக் கூறாதிருக்கின்ற காரியமானது மிக மோசமான ஒன்றாக இருக்கின்றது**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: பயப்படாதீர்கள், 11.03.1961

இன்றைக்கு தாய்கள் தங்கள் பிள்ளைகளை எடுத்து அவர்களுக்கு வேதாகமக் கதைகளைக் கூறாதிருக்கின்ற காரியமானது மிக மோசமான ஒன்றாக இருக்கின்றது.

ஒரு தாய் மாத்திரம் அல்ல. அவ்விதமாகச் செய்கின்ற ஒரு மேய்ப்பனைக் காண்பதும் மிக அரிதானதாக இருக்கின்றது.

ஐந்து சுவிசேஷங்கள் உள்ளன என்று நான் நினைக்கின்றேன். வேதாகமத்தில் இருக்கின்ற அவைகளில் நான்கை மாத்திரமே நீங்கள் அறிவீர்கள். ஆகவே அவை என்னவென்றால் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் மற்றும் தாய் என்பவைகளே.

பிள்ளைகள் சிறியவைகளாக இருக்கும் போதே ஒரு தாய் அவைகளை அவர்களுக்கு கற்பிக்கிறாள்.

அவர்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியவைகளைக் குறித்து எந்த ஒன்றையும் அறிந்து கொள் வதற்கு முன்னதாகவே அந்நிலையி லிருந்து அவள் பிள்ளையை வளர்க்க ஆரம்பிக்க வேண்டும்.

ஆகவே தாய்கள் தங்கள் பிள்ளைக ளிடத்தில் தேவனைக் குறித்து பேசவும் அவர்களுக்காக ஜெபிக்கவும் அதிக நேரத்தை எடுத்துக் கொள்வார்களென்றால், நம்மிடத்தில் சிறுவர்கள் குற்றம் புரிதல் காரியமானது குறைவாகவே இருக்கும்.

கூறப்போனால் சிறுவர் குற்றம் புரிதலுக்கு காரியத்திற்கு முன்னதாக பெற்றோர் குற்றம் புரிதல் காரியம் தான் முதலாவதாக வைக்கப்பட வேண்டும். ஏதோ ஒரு தையல் போடும் விருந்து களுக்கு சென்று, சீட்டுக்கட்டு விளையாட்டு களை விளையாடி, மது குடித்து, புகை பிடித்து, அது போன்ற காரியங்களில்

ஈடுபடுவதற்கு பதிலாக தாய்கள் வீடுகளில் தங்கள் ஸ்தானத்தை எடுத்து, வேதாகமத்தை எடுத்து தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபித்து அவர்களை கிறிஸ்துவண்டை வழி நடத்துவார்களானால்...

ஊம் அதைக்குறித்து பேச ஆரம்பித்து விட நான் விரும்பவில்லை. ஆனால் என்னவாகிலும்.. நான்... அப்படிச் செய்வதென்பது மோசமான காரியமாகும்.



நான் உங்களுக்கு இதைக் கூறுகிறேன்;
இன்று நமக்குத் தேவை என்னவென்றால்,
தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிற நல்ல,
பழைமை நாகரீகமான தாய்தகப்பன்மார்கள்
தான் இன்னும் அதிகமாக நமக்குத் தேவை



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

❶

## செய்தி: வழக்காடுவோம் வாருங்கள், 04.10.55

ஒரு மருந்து என் மகன் பில்லி பாலை ஏறக்குறைய கொன்றே போட்டு விட்டது. சுமார் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் பில்லி பால் ஒருவித பழக்கத் திற்குள்ளாகி இங்குமங்கும் சுற்றிக் கொண் டிருந்தான். அதன் காரணமாகத்தான் நான் அவனை வாக்சஹாட் சீக்கு (waxahatchee), அங்குள்ள பள்ளிக்கு அனுப்ப வேண்டிய தாயிருந்தது. நம்முடைய பொதுப்பள்ளி யில் பையன்கள் கூட்டமானது சிகரெட் களை பிடித்துக் கொண்டும் மற்றவை களைச் செய்து கொண்டும் இருந்தன. ஒரு

நாள் பில்லி வீட்டிற்கு வந்து “அப்பா எப்படி இருக்கிறீர்கள்”? என்றான்.

அப்பொழுது ஒரு தரிசனம் அவன் மீது மேலெழும்பத் தொடங்கியதை நான் கண்டேன். நான் அப்பொழுது “இங்கே ஒரு நிமிடம் வா, நான் உன்னோடு சற்று பேச வேண்டும்” என்றேன்.

அதற்கு அவன், "அப்பா என்ன அது?" என்றான்.

நான், “நீ செய்து கொண்டிருப்பது என்ன, நீ சிகரெட்டு புகைக்கின்றாயே?" என்றேன்.

அவன் “நான் புகை பிடிப்பதில்லை ” என்றான்.

அப்பொழுது நான், 'பில்லி, என்னிடம் நீ பொய் சொல்லாதே” என்றேன்.

அப்பொழுது அவன் அழத்தொடங்கி னான்.

அவன், "அப்பா இனிமேல் அவ்வித மாக நான் செய்ய மாட்டேன்" என்றான்.

பிறகு அவன் வெளியே சென்றான். அவன் தொடர்ந்து சிகரெட்டு பிடித்துக் கொண்டு தான் இருந்தான். அவனால் அதை மறைக்கக்கூடாதிருந்தது, மறைக்க முடியவில்லை. ஆகவே நான் ஒரு தரிசனம் கண்டடேன். அதில் பில்லி எனக்கு கீழ்ப்படியாதிருந்து, ஒரு ஜன்ன லின் வழியாக குதித்துச் சென்று மிகவும் சிரித்துக் கொண்டு இருந்தான். காலமானது கடந்து கொண்டே சென்றதை நான் அத்தரிசனத்தில் கண்டேன். நான் அந்த தரிசனத்திலிருந்து வெளி வந்த உடன், என் உச்சக்கட்ட குரலில் நான் "ஓ தேவனே, என் மகனை எடுத்துக் கொள்ளாதேயும், கர்த்தாவே, எனக்கிருக்கும் ஒரே மகன் அவன் தான்" என்று கதறினேன். நான் என் உச்சக்கட்ட குரலில் நான் சத்தமாய்க் கதறிக்கொண்டிருந்தேன். பில்லியிடம் நான் கூறினேன்.

❷

# செய்தி: தேவனை அணுகும்விதம், 55-0123A

21. வேதாகமத்திலேயே மிகப் பழமையான புத்தகமாக யோபுவின் புஸ்தகம் இருக்கிறது... வயதான மனிதனாகிய யோபு... அவனுடைய வீட்டில் பேரழிவு வருவதற்கு சற்று முன்பு, அவன் ஒருவிதமாக கவலை கொண்டிருந்தான். அவனுக்கு ஒரு கூட்டம் பிள்ளைகள் இருந்தார்கள், அவர்கள் உலகப் பிரகாரமாக வெளியிலே போய்க் கொண் டிருந்து, உலகத்தின் காரியங்களுடன் சேர்ந்து கொண்டிருந்தார்கள்.

அது எப்படிப்பட்ட ஒரு உணர்ச்சியாக இருக்கும் என்று பெற்றோர்களாகிய நம் எல்லாருக்கும் தெரியும். உங்களுடைய

பிள்ளைகள், உங்களுடைய அதே இருதயம், உலகத்தோடு சேரத் துவங்கும் போது, அவிசுவாசிகள் மத்தியில் வெளியே போய் விடுகிறார்கள். பில்லி இந்நேரத்தில் இங்கே இருக்கிறான் என்று நான் நினைக்கவில்லை; அவன் ஒருக்கால் சகோதரன் உட் அவர்க ளோடு வெளியிலிருந்து பேசிக் கொண்டிருக் கிறான் என்று நினைக்கிறேன். ஆனால் எங்கள் பட்டணத்தில், எங்களுக்கு ஒரு கிறிஸ்தவ பள்ளியும் கிடையாது. அங்கே ஒரு கூட்டம் உலகப்பிரகாரமான பிள்ளைகளும், சிறு பெண்களும், பையன்களும் கூட இருக்கிறார்கள். என்னுடைய மகனை அந்தப் பள்ளிக்கு அனுப்புவதைக் குறித்து நான் எண்ணிப் பார்த்த போது, நான் அவனுக்கு பயிற்றுவித்திருந்த ஒவ்வொரு காரியத்தையும் அறிந்திருந்தேன். அவன் உண்மையாகவே மனமாற்றம் அடைந்து, உண்மையாகவே, கிறிஸ்துவிடம் வராவிட்டால், அதாவது, அவனுடைய சுபாவங்கள் எல்லாம் மாறி விடும், அவன் இந்த உலகப்பிரகாரமான கூட்டத்தோடு சேர்ந்து கொண்ட உடனே,

என்னுடைய கைகளின் கீழிருந்து அவன் விலகிச் சென்று விட்டான். ஏனென்றால் அவன் ஒரு நல்ல பையனாயிருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல, அவனுக்குள் இருக்கும் அதே சுபாவமானது, அது... (கிரியை) செய்வதில்லை. அவனுக்கு ஒரு ஊழியக்கார தகப்பனார் உண்டு, அவனுக்கு ஒரு பக்தியான வீடும் உள்ளது, அங்கு நாங்கள் எங்கள் வீட்டில் உலகப்பிரகாரமான எந்தக் காரியத்தையும் அனுமதிப்பதில்லை... கிறிஸ்த வர்கள் ஜீவிக்க வேண்டியது போல, நாங்கள் தேவனுடைய கிருபையினால் ஜீவிக்கவே முயற்சி செய்கிறோம், அந்த செல்வாக்கு (தாக்கம்) அவனுக்கு முன்பாக ஏற்படுத்தப் பட்டிருந்தது. அவன் இழக்கப்பட்டு போயிருந் தால், அவன் நிச்சயமாகவே இழக்கப்பட்டவ னாய் ஒரு நீதியான வீட்டை நோக்கி நடந்து வந்து விடுவான் என்பதை நான் அறிந்திருந் தேன். அவன் என்னுடைய ஜீவியத்தோடு நடந்து வர வேண்டுமென்று தான் நான் விரும்புகிறேன். அவன் வேதாகமத்தோடு நடக்க வேண்டும். அவன் கிறிஸ்துவின்

இரத்தத்தோடு நடக்க வேண்டும். ஏனென்றால் தேவனுடைய கிருபையினால், நான் நிச்சய மாகவே அவனுக்கு முன்பாக அதைக் காண்பிப்பேன்.

22. ஆனால் அவனுடைய சுபாவம் மாறி யிராவிட்டால், அவன் அப்படியே அதேவித மாகவே தொடர்ந்து செய்வான். பில்லி உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்த அந்த நாளைக் குறித்து நான் எவ்வளவாக எண்ணிப் பார்க்கிறேன். நான், "ஓ, என்னே" என்று எப்படியாக எண்ணினேன். அவன் இன்னும்... என்பதை அறிந்திருந்தேன். அவன் கொண் டிருந்தான், ஓ, அவன் ஞானஸ்நானம் பெற்றவனாயிருந்தான், நிச்சயமாக, ஆனால் அவன் கிறிஸ்துவுக்கு முழுமையாக ஒப்பு விக்கவுமில்லை, அர்ப்பணிக்கவுமில்லை. ஒரு பிள்ளைக்குரிய சுபாவம் இன்னும் அவனுக் குள் இருந்தது என்பதை அறிந்து கொண்டு, என்னுடைய இருதயம் எவ்வளவாய் அவனுக்காக ஏங்கினது, நான் எவ்வளவாக ஜெபித்தேன், என்னுடைய காரில் வெளியே சென்று சுற்றிலும் பிரயாணம் செய்து,

“தேவனே, எனது மகன் அங்கே வெளியிலுள்ள அந்த விதமான காரியத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ள நீர் அனுமதிக்க வேண்டாம்” என்று கூறுவேன். நான் எப்படி யாக, “தேவனே, நான்-நான் நம்புகிறேன், நான் ஜெபிக்கிறேன், அவனுடைய தாய் மரித்து விட்டாள், நானே அவனுக்கு தகப்ப னாகவும் தாயாகவும் இருந்து வருகிறேன். எனவே தயவுசெய்து அவன் அங்கே வெளியில் இருப்பவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு, அவன் தொல்லையில் சிக்கிக் கொள்ள அனுமதிக்க வேண்டாம். ஏதாவதொரு வழியில் நீர் அவனைப் பாது காத்துக் கொள்வீரா?” என்று கூறினேன்.

23. ஓ, இந்தப் பிற்பகல் வேளையில், எனக்கு நேரம் இருக்குமானால், தேவன் எப்படியாக பில்லியின் வழிக்குக் குறுக்கே மீண்டும் மீண்டுமாக சிகப்பு விளக்கை வைத்தார் என்பதை விளக்கிக் கூற பல மணி நேரங்கள் பிடிக்கும். ஆம், ஐயா. நான் அவனை... கண்டிருக்கிறேன். இங்கே சமீபத்

தில், நான் நியூஆல்பெனியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன், குழந்தையினுடைய (அவளுடைய) பற்கள் எல்லாம் முளைத்துக் கொண்டிருந்தன, பள்ளியிலுள்ள சிறு பிள்ளை அவளுடைய பற்களை உடைத்து விட்டது. அதன்பிறகு, பில்லி வெளியே மீன் பிடித்துக் கொண்டிருந்து விட்டு, உள்ளே நுழைந்தான், அப்போது அவனுக்கு மோசமான ஜலதோசம் அல்லது ஏதோவொன்று ஏற்பட்டிருந்தது. நான் சில ஊழியக்காரர்களோடு இருந்தேன், நாங்கள் நியூஆல்பெனியில் அமர்ந்திருந் தோம். சிறிய மகளுடைய பற்களைச் சரி செய்யும்படியாக மனைவி அவளுடன் போயி ருந்தாள். நான்... நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த போது, ஏதோவொன்று, "காரை விட்டு வெளியே வந்து நடக்கத் துவங்கு" என்றது.

நான், "அது என்ன?" என்று நினைத் தேன். நான் வெளியே வந்து தெருவில் நடக்கத் தொடங்கினேன். பரிசுத்த ஆவியான வர் என்னை அங்கே சந்தித்து, "சீக்கிரமாக

வீட்டிற்குத் திரும்பிப் போ. பில்லி மரணத் தருவாயில் இருக்கிறான்" என்றார்.

அவன் தன்னுடைய மிதிவண்டியில் மீன்பிடிக்கப் போகும்படியாக நான் அவனை விட்டு வந்திருந்தேன். நல்லது, அவன் அங்கே இறங்கிப் போனான், அவன் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, ஆற்றில் விழுந்து நனைந்து விட்டிருப்பானோ என்று நான் நினைத்தேன், அவனுக்கு மோசமான சளிப்பிடித்து, அந்த ஆற்றினருகிலேயே எதுவும் செய்யாமல் இருந்திருக்கிறான். பிறகு அவன் வீட்டிற்குத் திரும்பி வருவதற்குப் பதிலாக, சாம் அவர்களிடம் போய் (அவர் என்னுடைய ஒரு மருத்துவ நண்பர்), "டாக்டர், எனக்கு ஒரு பென்சிலின் ஊசி போடுங்கள். நான்... இன்று நான் நனைந்து விட்டேன். எனக்கு எந்த மோசமான சளியும் பிடிக்க எனக்கு-எனக்கு விருப்பமில்லை" என்று கேட்டுக் கொண்டான். மருத்துவர் அவனுக்கு ஒரு பென்சிலின் ஊசி போட்டார், அதற்குப் பிறகு அவன் வீட்டிற்கு வந்து

சேர்ந்தான், அவனுடைய கால்விரல்களைச் சுற்றிலும் அவ்வளவு பெரிதாக இருந்தது, அவன் கீழே விழுந்திருந்தான்...

24. அங்கிருந்த என்னுடைய மாமியார் அவனை மிகவும் துரிதமாக அழைக்க, அவன் அங்கே ஓடிச் சென்றான், லூயிவில்லி லிருந்து ஒரு சிறப்பு மருத்துவர் அழைக்கப் பட்டார், ஆம்புலன்ஸ் அதிவேகமாக அங்கே வந்து அவனை மருத்துவமனைக்கு கொண்டு சென்றது, அவன் அங்கே உள்ளே படுத்திருந்தான், அவனுடைய இருதயத்தின் மேல் இரண்டு adrenalin ஊசி போட்டார் கள். அவனுடைய இருதயம் 20 முறை துடிக்க வேண்டிய நேரத்தில் பத்து முறை தான் துடித்துக் கொண்டிருந்தது. அவ்விதமாக ஏதோவொன்று. நான் அவசர அவசரமாக வீட்டிற்குச் சேன்றேன். என்னோடிருந்த அந்த ஊழியக்காரர்கள், "பில்லியை உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டனர். நான், "நீங்கள் கவனித்துப் பாருங்கள்" என்றேன். நாங்கள் வாசலுக்குள் நுழைந்தோம், அங்கே

என்னுடைய மாமியார் முற்றத்தில் நின்று கொண்டு, அவர்களுடைய உச்சக்குரலில் கதறிச் சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள், “பில்லி மருத்துவமனையில் மரித்துக் கொணடிருக்கிறான்” என்றார்கள். நான் அப்படியே அவர்கள் எல்லாரையும் (அங்கேயே) வெளியே விட்டு விட்டு, எவ்வளவு கூடுமோ அவ்வளவு வேகமாக, மருத்துவமனையை நோக்கிச் சென்றேன்.

25. இரண்டு நாட்களுக்கு முன்பு தான், நான், “பில்லி, நீ ஆபத்தான நிலத்தில் நடந்து கொண்டிருக்கிறாய். நீ சேர்ந்துள்ள கூட்டத்தை விட்டு வெளியில் வந்து விடு. கடந்த இரவில், ஜெபத்திற்குப் பிறகு, அங்கே அந்த அறையில் நான் நின்று கொண்டிருக்கையில், நான் படுக்கைக்குப் போகும் முன்பாக கர்த்த ராகிய இயேசு எனக்கு இதைக் காண்பித்தார், நான் என்ன கூறிக் கொண்டிருந்தேனோ அதை நீ கேட்கவே செய்யாததை நான் கண்டேன். ஆனால் நீ ஒரு ஜன்னலிலிருந்து குதித்து, நீ இவ்விதமாக தலையை மேலே

திருப்பி, குதிகால்களும் மேலே (எழும்பி), மேலே, மேலே ஆகாயத்தினூடாகப் போய்க் கொண்டிருப்பதை நான் கண்டேன். அந்த விதமான கூட்டத்தோடு சுற்றுவதை நீ கட்டாயம் விட்டு விட வேண்டும்" என்றேன். நல்லது, அவனோ ஒரு பிள்ளையாக, தொடர்ந்து போய்க் கொண்டிருந்தான்.

26. அதன்பிறகு நான் அங்கே மருத்துவ மனைக்கு விரைந்தேன், இதோ என்னுடைய சிறு டாக்டர் நண்பர், கீழே ஹாலுக்கு வந்தார், அவர் தம்முடைய தொப்பியை கீழே ஹாலில் எறிந்து விட்டு, "பில்லி, சில நிமிடங்களுக்கு முன்பு உம்முடைய மகனை ஏறக்குறைய கொன்றே விட்டேன், அப்படித்தான் நம்பு கிறேன். எங்களுக்கு இங்கு இரண்டு சிறப்பு மருத்தவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் அவனுக்கு இரண்டு adrenalin ஊசிகளை... சரியாக அவனுடைய இருதயத்தின் மேல் போட்டோம். அவன் இன்னும் சுயநினை வற்றவனாகத் தான் அங்கே படுத்துக் கொண் டிருக்கிறான்" என்றார்.

27. ஒரு தகப்பனாகவும், சுவிசேஷத்தின் ஒரு ஊழியக்காரனாகவும் இருந்து, அதை நேராக்க முயற்சித்து வந்த நான், மெதுவாக நடக்கத் துவங்கினேன். நான், “சரி, டாக்டர், நீர்-நீர் என்னுடைய நண்பர். எப்படி செய்ய வேண்டும் என்று நீர் அறிந்திருக்கிற சிறந்ததை நீர் செய்தீர்” என்று கூறினேன்.

அவர், “பில்லி, அதனால் அவனுக்கு ஒவ்வாமை ஏற்பட்டு விட்டதோ எனக்குத் தெரியவில்லை. நான் முன்பு அவனுக்கு அதைக் கொடுத்திருக்கிறேன் (ஊசியைப் போட்டிருக்கிறேன்). என்ன நடந்ததோ எனக்குத் தெரியவில்லை” என்று கூறினார். அவர் தமது கரங்களைத் தட்டிக் கூப்பிட்டார், ஏனென்றால் நாங்கள் அன்புக்குரிய நண்பர்க ளாயிருந்தோம். மேலும் அச்சிறு...

அவர் ஹாலில் இறங்கத் தொடங்கினார், நான், “டாக்டர், நான் அவனைப் பார்க்க லாமா?” என்று கேட்டேன்.

அவர், “நல்லது, நாங்கள் அவனில் ட்யூப்புகளை மாட்டி வைத்திருக்கிறோம். போங்கள்” என்றார்.

28. நான் மிக மெள்ள நழுவி உள்ளே சென்று அவன் எங்கேயிருக்கிறான் என்று கவனித்தேன்...?... நான் எனக்குப் பின்னாக கதவை கீழே இழுத்து விட்டுக் கொண்டேன், அங்கே பில்லி அப்படியே... முகம் எவ்வளவு கறுப்பாக இருக்க முடியுமோ அவ்வளவு கறுப்பாகவும், அவனுடைய கண்கள் பின்னோக்கி இருந்தன. அவர்கள் அவனுக்கு சுவாசத்தை குழாய் மூலமாக களகளவென்ற சத்தத்துடன் உட்செலுத்திக் கொண்டிருந் தார்கள், அவனுடைய மூக்கு வழியாக ஒரு குழாய் மாட்டப்பட்டிருந்தது, மற்றும் எல்லா காரியங்களும் இருந்தன. அவனுடைய நாக்கு வெளியே தள்ளிக் கொண்டிருந்தது, அவனு டைய வாய் பின்னோக்கி இழுக்கப்பட் டிருந்தது, அவனுடைய கண்கள் நிலைத்து நின்றன; அவன் எவ்வளவு கறுப்பாக இருக்கக் கூடுமோ அவ்வளவு கறுத்துப்

போய் இருந்தான், நான், "அதோ அவன் இருக்கிறான்" என்று நினைத்தேன். (உடனே) முழங்கால்படியிட்டு, நான், "தேவனே, நீர் என்னுடைய ஒரே மகனை எடுத்துக் கொள்வீரா. கர்த்தாவே, நீர் அவனை எடுத்துக் கொள்வீரா, நான் அவனை என்னுடைய கரங்களில் சுமந்திருக்கிறேனே, அது முதற் கொண்டு. பிள்ளைகளைக் குறித்து நீர் புரிந்து கொள்வீர் என்பது எனக்கு-எனக்குத் தெரியும், கர்த்தாவே. நீர் அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஜெபிக்கிறேன்" என்று நினைத்தேன். எவ்வளவு அமைதியாக இருக்க முடியுமோ அவ்வளவு அமைதியாக நான் தேவனுக்கு முன்பாக இருந்தேன்.

29. என்னை இரட்சிக்கும்படியாக மரித்த, அவருடைய சொந்த குமாரனாகிய, தேவ குமாரனாகிய இயேசுவின் மூலமாக அவரிடம் கிட்டிச் சேரும்படியாக (அணுகும்படியாக), இங்கே இந்தப் பிற்பகலில் இந்தப் புனிதமான மேடைக்கு முன்பாக (நிற்கிற) என்னுடைய நியாயாதிபதியாகிய சர்வவல்லமையுள்ள

தேவன்... நான் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, இதோ அந்தத் தரிசனம் மறுபடியுமாக வந்தது. அந்த தரிசனத்தில் அவன் அவ்வித மாக கீழே கீழே நோக்கி சுழன்றபடி போய்க் கொண்டிருக்கையில், அவனுடைய கால்களும் தலையும் ஆகாயத்தில் சுற்றி சுற்றி உயரே பறந்து கொண்டிருந்தது, அந்த தரிசனத்தை ஒரு சில இரவுகளுக்கு முன்பு கண்டேன். பிறகு இரண்டு கரங்கள் நீட்டப்பட்டு, இவ்விதமாக அவனைப் பிடித்து, அவனைச் சுமந்தபடி திரும்பி வரத் துவங்குவதை நான் கண்டேன். சற்று நேரத்தில், நான் மேலே நோக்கிப் பார்த்தேன்; அப்போது பில்லி உற்றுப் பார்த்து, அவன், "அப்பா, எங்கே இருக்கிறேன்... நான் எங்கே இருக்கிறேன்?" என்றான்.

நான், "எல்லாம் சரியாக இருக்கிறது, மகனே. எல்லாமே சரியாக இருக்கிறது" என்றேன்.

30. நான் அங்கே சுற்றிச் சென்றேன், டாக்டர் அங்கே நின்று கொண்டு துணை

மருத்துவரிடம் பேசிக் கொண்டிருந்தார். அவர் அங்கிருந்து போவது வரை நான் காத்திருந்தேன். நான் டாக்டரைச் சுற்றி என்னுடைய கரத்தைப் போட்டுக் கொண்டு, நான், "டாக், எல்லாம் முடிந்து விட்டது" என்றேன்.

அவர், "அவன் சுகமாகப் போகிறான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டார்.

நான், "அவன் சுகமடைந்து விட்டான்" என்றேன். கிறிஸ்து... ஆமென். ஒரு அணுகு முறையைக் குறித்து பேசுதல்.

ஆமாம், யோபு தன்னுடைய பிள்ளைகள் ஒருக்கால் தற்செயலாக பாவம் செய்திருக்க லாம் என்று ஒருவேளை நினைத்து, "அவர் கள் ஒருக்கால் பாவம் செய்திருப்பார்கள், அதைக் குறித்து எனக்கு-எனக்குத் தெரியாது" என்று கூறினான். எனவே அவன் தான் அணுக முடிந்த ஒரே ஒரு வழியை மாத்திரமே அவன் கொண்டிருந்தான்.

அதுதான் சர்வாங்க தகனபலியின் கீழாக இருந்தது.


31. எனவே அவன் சர்வாங்க தகன பலியை கொண்டு சென்று, தன்னுடைய பிள்ளைகளுக்காக பலி செலுத்தினான். அவன் தன்னுடைய பிள்ளைகள் எல்லாருக் காகவும் பலி செலுத்தினான், அது ஒருக்கால்... கவனியுங்கள், பாருங்கள், அவர்கள் ஒருக்கால் பாவம் செய்திருக்கலாம். ஒருக்கால் அவர்கள் யோபுவுடைய பக்கத்தில் வைத்து ஒருக்காலும் பாவம் செய்யாமல் இருந்திருக் கலாம். அவனுக்கு ஒருக்கால் அதைக் குறித்து எதுவும் தெரியாதிருக்கலாம். ஆனால் அவர்கள் வெளியே உலகத்தில் தனியாக இருந்ததை அவன் அறிந்திருந்தான்...

நான் உங்களுக்கு இதைக் கூறுகிறேன்; இன்று நமக்குத் தேவை என்னவென்றால், தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிற நல்ல, பழைமை நாகரீகமான தாய்தகப்பன்மார்கள் தான் இன்னும் அதிகமாக நமக்குத் தேவை. நமக்கு அப்படிப்பட்ட தாய்தகப்பன்மார்கள்

இருந்திருந்தால், எனக்குத் தெரிந்த இளம் பருவத்தினரின் குற்றங்களை ஒழித்துக்கட்ட அது மிகப்பெரிய உதவியாக இருக்கும். முதலாவது, தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிற பழைமை நாகரீகமான தாய்தகப்பன்மார்களை எனக்குக் கொடுங்கள்.

32. இந்தப் பிற்பகல் வேளையில், இதோ பாருங்கள், பையன்களே, சிறு பெண் பிள்ளை களே. அதைப் போன்ற ஒரு தாயோ தகப்பனோ உங்களுக்கு இருந்து, பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தில் பேசிக் கொண்டிருந்து, உங்கள் தாய்மார்களுடைய ஜெபங்களையும் மீறி நீங்கள் நடந்து கொண் டிருப்பீர்களானால், இதை ஞாபகம் கொள் ளுங்கள். நீங்கள் திரும்பி, உங்களைத் தானே கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கும் மட்டுமாக, நீங்கள் ஒருபோதும் வாழ்வடையவே மாட்டீர்கள். அது உண்மை.

**சூசன்னா வெஸ்லியைக் குறித்து நினைக்கிறேன். அவளுக்கு 17 பிள்ளைகளென்று நினைக்கிறேன். அது சரியென்று நினைக்கிறேன். ஆனால் அவள் இரண்டு அல்லது அதிகமான மணி நேரம் ஒவ்வொரு நாளும் ஜெபிக்க நேரம் உண்டாக்கிக் கொண்டாள்.**




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-11-14 செல்வாக்கு

26. இப்பொழுது. இந்த வாலிபன், உசியா, இராஜாவாயிருந்தான். அவன் மந்தை மேய்க்கும் பையனாயிருந்தான்; அவனுக்கு வெளிப்புற காட்சிகள் மிகவும் பிடிக்கும். உசியாவின் ஜீவியத்தின் செல்வாக்கு ஏசாயாவின் ஏசாயாவின் ஜீவியத்தை பற்றிக் கொண்டதாயிருந்தது. ஏசாயாவும்கூட ஒரு வாலிபன், ஒரு வாலிப தீர்க்கதரிசியாயிருந்தான். நீங்கள் அந்தக் கதையை வாசித்திருக்கிறீர்கள். உங்களுக்கு வேண்டுமானால் நீங்கள் 2 நாளாகமம் 26ஐ வாசியுங்கள், அது உங்களுக்கு சொல்லும். எப்படி அவன் தன்னுடைய 16வது வயதினில், அவ னுடைய நீதிமானாகிய தகப்பன் மரித்த பின்பு, அவர்கள் அவனை எடுத்து இஸ்ர வேலின்மேல் இராஜாவாக ஆக்கினார்கள்.

16 வயதினில் அவன் ஆட்சி புரிய ஆரம்பித்தான்.

அவனுடைய பெற்றோரின் ஜீவியத்தின் செல்வாக்கு (Influence) அவன் மேல் இருக்கின்றதை கண்டான்.

அவனுக்கு முன்பாக அவனுடைய தாய் ஒரு தெய்வ பக்தியுள்ள ஸ்திரியாயிருந்தாள்.

அவனுடைய தகப்பன் ஒரு தெய்வ பக்தியுள்ள மனிதனாய் இருந்தான்.

அப்படி இருந்ததினால் அந்த செல்வாக்கு (Influence) அந்த பிள்ளையின் பேரில் அமர்ந்து சரியானதை நடக்கும்படி செய்தது.

27. நான் உங்களுக்குச் சொல்லுவேன். நான் நினைக்கிறேன் இன்றைக்கு தேசமுழுவதுமாக இளம் பிள்ளைகளின் குற்றங்கள் அவ்வளவு அதிகமாய் இருக்கிறது. ஆனால், உண்மையாக, நான் நினைக்கி

றேன். அது வீட்டில்தான் துவங்கி இருக்க வேண்டும் என்று. பெற்றோர்கள் அதை அப்படியே விட்டு விட்டிருப்பார்களென்று நான் நினைக்கிறேன்.

அந்த பிள்ளை மட்டும், ஒரு நல்ல, பழையவிதமான, தெய்வீக வீடாய் இருக்குமாயின், நான் தேச முழுவதுமாக என்று சொல்ல மாட்டேன். நிச்சயமாக இல்லை. ஆனால் அது அந்த பிள்ளைக்கு சரியான விதமான செல்வாக்கை கொடுத் திருக்கும்.

நான் நினைக்கிறேன். அநேக நேரங் களில் வீடுகளில் தான் பிள்ளைகளை தவறாக வளர்க்கிறார்கள். தங்களிஷ்டப்படி வீதியில் திரிய விடுகிறார்கள்.

அவர்களுடைய தாயானவள் அல்லது தகப்பன் மது அருந்தும் கடையில் இருக்கும்போது, அந்த பிள்ளை தன்னைத் தானே நடத்திக் கொள்ளுகிறது.

இந்த பிள்ளையைக் குறித்து அக்கரை எடுப்பது கிடையாது.

இன்னொரு காரியம், அந்த பிள்ளையை எடுத்து அதை நேசிப்பது கிடையாது.

அதனிடம் பாசங்காட்டுவதில்லை.

அது வாலிபமாய் இருக்கிறது. நேசமும் மரியாதையும், அதற்கு சொல்லித்தர வேண்டும். வேதம் வாசிக்க சொல்லிதர வேண்டும்.

28. சூசன்னா வெஸ்லியைக் குறித்து நினைக்கிறேன்.

அவளுக்கு 17 பிள்ளைகளென்று நினைக்கிறேன். அது சரியென்று நினைக்கிறேன்.

ஆனால் அவள் இரண்டு அல்லது அதிகமான மணி நேரம் ஒவ்வொரு நாளும் ஜெபிக்க நேரம் உண்டாக்கிக் கொண்டாள்.

அவளுடைய சின்ன ஆடையின் ஓரத்தை சுற்றிலும், அந்த பையன்கள் சுற்றிலும் முழங்காலில் இருந்தார்கள்.

அவர்களுக்குள்ளிருந்து உண்டாக்கப் பட்டது தான் ஒரு ஜானும் ஒரு சார்லசும். அவர்கள் தான் உலகத்தின் போக்கை மாற்றி, அந்த நாளில் உலகத்தை இரட்சிப் புக்குள் ஆக்கினவர்கள்.

அவளுக்கு ஆடைகளை துவைக்கவும், உலர வைக்கவும் இயந்திரங்கள் உண்டா யிருந்ததில்லை.

இன்றைக்கு நமக்கு இருப்பது போன்று பாத்திரங்கள் கழுவ இயந்திரம், இன்னும் மற்றவைகள், ஒரு வேலைக்காரி அவ ளுக்கு இல்லை.

அவளாகவே தான் எல்லா வேலை களையும் செய்ய வேண்டியவளாய் இருந்தாள். இருந்தபோதிலும் அவளுக்கு நேரம் இருந்தது.

ஏனென்றால் சில பிள்ளைகளின் மேல் அவளுடைய ஜீவியத்தின் செல்வாக்கானது இருந்தது. அது முடிவிலே உலகத்தின் போக்கையே மாற்றி விட்டது. நான் நினைக்கிறேன் அதுதான் பழங்காலத்து தாய், பழங்காலத்து வீடு, ஜெபமும் வேதத்தை அறிந்து கொள்ளுதலும் அங்கே இருந்தது.

29. நான் நினைக்கிறேன், ஆபிரகாம் லிங்கென், தன்னுடைய பருவம் வரும் வரைக்கும் தனக்கே சொந்தமாக ஒரு புத்தகத்தையும் உடையவனாயில்லை. ஆனால் வேத புத்தகமும், பாக்ஸின் இரத்த காட்சிகளின் புத்தகம் (Foxe's books of Mantrys) என்று நான் நினைக்கிறேன். ஒரு வேளை..... மோட்சயாத்திரை (Pilgrim progress) புத்தகம் என்று நினைக்கிறேன். அதையும் வேதாகமத்தையும் (Pilgrim progress) உடையவராயிருந்தார். பாருங்

கள் அது எந்தவிதமான குணவானை உருவாக்கிற்றென்று.

30. நான் திடீரென்று உங்கள் வீட்டுக்குள் வந்து நீங்கள் எந்தவிதமான படங்களை உங்கள் வீட்டு சுவரில் மாட்டியிருக்கிறீர்கள் என்று நான் பார்க்கட்டும். நான் உங்களை வீடுகளுக்கோ அல்லது அலுவலங்களுக்கோ போய் எந்தவிதமான இன்னிசையை கேட்கிறீர்கள் என்று பார்க்கட்டும். புரிகின்றதா? நீங்கள் என்ன படிக்கின்றீர்கள், நீங்கள் எதை நோக்கிப் பார்க்கிறீர்கள், இதைக் கொண்டு உனக்குள்ளாக என்ன இருக்கின்றது என்பதை என்னால் சொல்ல முடியும், ஏனென்றால் இவைகளால் தான் அது போஷிக்கப் படுகின்றது. புரிகின்றதா? நாம் மட்டும் நம்முடைய வீடுகளை சற்று நன்றாக வைத்துக் கொள்வாவோமானால் நம்முடைய பிள்ளைகள் ஓடிப் போக விரும்ப மாட்டார்கள். காரியங்களை அவர்களுக்காக அதிகமாக்குங்கள், அவர்களுக்கு ஒரு

நல்ல வரவேற்பு வீடாய் இருக்கும்படியாய் ஒரு நல்ல வசதியான வைத்துக் கொள் ளுங்கள். அப்படியானால் எப்பொழுது வீட்டிற்கு போவோம் என்று காத்துக் கொண்டிருப்பார்கள். அந்த விதமாகத்தான் ஒரு வீடு இருக்க வேண்டும்.


31. அவ்விதமான ஒரு வீட்டினில் தான் உசியா வளர்க்கப்பட்டிருக்க வேண்டு மென்று நான் நினைக்கிறேன். தெய்வ பயமுள்ள பெற்றோர்களுடைய ஜீவிய செல்வாக்கின் (Influence) காரணமாகத் தானிருக்கவேண்டும். அவன் இராஜாவாக ஆக்கப்பட்டவுடனே, எல்லா புகழ் கருத்துக்களை, அரசியல் வித்தியாசங் களையும் அவன் ஒதுக்கி விட்டு, அவ னுடைய மனதை ஒரு காரியத்தின் மீது வைத்தான். அதாவது எப்படியாயிருந் தாலும் சரி, தேவனுக்கு சேவை செய்ய வேண்டும். இப்படிப்பட்டதான அரசியல் வாதிகள் பலர் நமக்கு தேவையாய்

இருக்கிறது. தான் தேவனுக்கு சேவை செய்யப் போகிறேன் என்பதை அவன் தீர்மானித்தவனாய் இருந்தான். ஏனென் றால் அந்த விதமாகத்தான் அவன் வளர்க்கப் பட்டான். அவன் தேவனுக்கு சேவை செய்து ஜீவிக்கும்படியாக, அவ னுடைய தகப்பனுடைய ஜீவியம் சரியான தொரு செல்வாக்கை (Right Influence) அவனுக்குக் கொடுத்தது.



சாண்டாகிளாஸ் (Santa Claus) என்பது ஒரு கட்டுக்கதைத்தானே தவிர வேறெதுவுமில்லை. அப்படிப்பட்ட ஒரு காரியமானது இருந்ததே கிடையாது !

பிள்ளைகளுக்கு நீங்கள் பொய்களைக் கூறுவீர்களானால் நியாயத்தீர்ப்பின் நாளிலே அதற்காக நீங்கள் பொறுப்பாளியாவீர்கள். ஆமாம்.




செய்தி: **தேவனால் சுற்றப்பட்ட வெகுமதி, 25.12.1960**

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக தன் கால்களை முடக்கும்போது, அவனுக்குள் எத்தகைய வல்லமை இருக்கிறது என்பதை கிறிஸ்தவர்களே உணரவில்லை. அது எத்தகைய வல்லமை என்பதை – அவன் உணருவதில்லை.

**செய்தி:** *என் தூதனானவர் உனக்கு முன்பாக போவார், 53-0216*

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



# குடும்பம்

